
Edit with WPS Office

# B.A - HISTORY II YEAR

## HISTORY OF INDIA FROM 1707-1857 C.E(18K3H05)

### UNIT- I : LATER MUGHALS

#### இரண்டாம் பகதூர் ஷா ஜாஃபர்



- கடைசி முகலாய பேரரசராக இருந்த இரண்டாம் பகதூர் ஷா ஜாஃபர் ஒரு அரசராக மட்டும் இருக்கவில்லை. அவர் சூஃபி ஞானி, ஒரு சிறந்த உருது கவிஞர். ரங்கூனில் (யாங்கூன்) 1862-ம் ஆண்டு, சிதிலமடைந்த ஒரு மரவீட்டில், பகதூர் ஷா ஜாஃபர் தனது கடைசி மூச்சை சுவாசித்த போது, அவரை சுற்றி அவரது நெருங்கிய உறவினர்கள் சிலர் மட்டுமே இருந்தனர்.

- பகதூர் ஷாவை அடிமைப்படுத்தி வைத்திருந்த பிரிட்டிஷ்காரரர்கள், அவர் இறந்த பிறகு, அவரது பிரேதத்தை புகழ் பெற்ற ஷ்வைடகன் பகோடா என்னும் இடத்தின் அருகே உள்ள அடையாளம் குறிக்கப்படாத ஒரு இடத்தில் புதைத்தனர்.

- தோல்வி, மனசோர்வு, அவமானம். இப்படிதான் இந்தியா, பாகிஸ்தன், வங்கதேசம், ஆப்கனின் சில பகுதிகளை முந்நூறு ஆண்டுகளாக ஆட்சி செய்த ஒரு பேரரச வம்சாவழியின் கடைசி அரசனின் முடிவு அவமானகரமானதாக இருந்தது.

- இவருடைய ஆட்சியை இவரின் முன்னோர்களான அக்பர், அவுரங்கசிப் போன்ற ஒப்பற்ற அரசர்களின் ஆட்சியுடன் ஒப்பிட முடியாது என்றா லும், 1857 -ம் ஆண்டு பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக போராடி தோல்வி கண்ட முதல் இந்திய எழுச்சியின் தொடக்கப்புள்ளி ஜாஃபர்தான்.

- இந்திய எழுச்சி என்று வர்ணிக்கப்படும் அந்த பெரும் போராட்டம் அப்போதைய அகண்ட இந்தியாவின், அதாவது ஆப்கனின் சில பகுதிகள், இந்தியா, பாகிஸ்தான், வங்க தேசம் ஆகிய நாடுகளை சேர்ந்த சிப்பாய்களால் மேற்கொள்ளப்பட்டது.

- இந்த `இந்திய எழுச்சி` தோல்வியை தழுவியதும், பகதூர் ஷா ஜாஃபர் ராஜ

Edit with WPS Office

துரோக குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, அப்போது பிரிட்டிஷ் அரசின் ஆளுகையில் இருந்த பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

- பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த பகதூர் ஷா, நவம்பர் 7-ம் தேதி, தன்னுடைய 87-ம் வயதில் உயிரிழந்தார். ஆனால், அவர் எழுதிய கவிதைகள் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக் கின்றன. ஜாஃபர் என்பது அவருடைய உண்மையான பெயர் அல்ல. அவருடைய புனை பெயர். அதன் பொருள் `வெற்றி`.

- ஜாஃபர் அரியணை ஏறியது 1837-ம் ஆண்டு. ஆனால், 1700-ம் ஆண்டு காலக்கட்டத்திலேயே, முகலாய பேரரசு தனது கட்டுப் பாட்டில் இருந்த பிரதேசங்களையும், தனது ஆதிக்கத்தையும் இழந்து இருந்தது.

- ஜாஃபர் பொறுப்பேற்றபோது, அவரது ஆளுகையின் கீழ் டெல்லி யும், அதன் சுற்றுவட்டார பகுதிகளும் மட்டும்தான் இருந்தன. இருந்த போதிலும், அவர் பேரரசராக போற்றப்பட்டார்.

- பகதூர் ஷா இறந்த பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கம், அவரது பிரேதத்தை அடையாளம் குறிக்கப்படாத ஒரு இடத்தில் புதைத்து. அதற்கு காரணம், அவரது மக்கள், அவரை கொண்டாட கூடாது என்பதும், அவர்களை அவரது நினைவுகளிலிருந்து தள்ளி வைக்க வேண்டும் என்பதும்தான்.
- அவரது இறப்பு செய்தி இந்தியாவை வந்தடைய ஏறத்தாழ 15 நாட்கள் ஆனது. அவரது இறப்பு இங்கு பெரிதாக கண்டுகொள்ளப்படாமலே போனது.
- நூறு ஆண்டுகளுக்குப் பின், அனைவரது நினைவுகளிலிருந்தும் ஜாஃபர் மெல்ல மறைந்தார்.

**முகலாயப் பேரரசின் வீழ்ச்சி**

- முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் (1759–1806) முகலாயப் பேரரசின் வீழ்ச்சியைத் தடுக்க முயற்சிகள் செய்தார். ஆனால் கடைசியில் ஆப்கா னிஸ்தானின் அமீரான அப்தாலின் பாது காப்பை கேட்கும் நிலைக்கு தள்ளப் பட்டார். இது கி.பி. 1761 ஆம் ஆண்டு அப்தாலி தலைமையிலான ஆப்கானி யர்களுக்கும் மராத்திய பேரரசுக்கும் இடையில் மூன்றாம் பானிபட் போருக்கு வழி வைத்தது. கி.பி. 1771 இல் மராத்தியர்கள் தில்லியை ஆப்கா னியர்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- கி.பி. 1784 இல் மராட்டியர்கள் அதிகாரப்பூர்வமாக டில்லியில் இருந்த பேரர சரின் பாதுகாப்பாளர்களாக மாறினார். இந்த நிலை மூன்றாம் ஆங்கிலேய மராத்திய போர் வரை நீடித்தது. அதன் பிறகு பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம்தில்லியில் இருந்த முகலாய அரசமரபின் பாதுகாவலர்களாக மாறியது. உள்ளூர் ஆட்சியான நிசாமத் ஆட்சியை நீக்கிய பிறகு பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி முன்னாள் முகலாய

Edit with WPS Office

மாநிலமான வங்காளம்-பீகாரை தனது கட்டுப்பாட்டுக்குள் கி.பி.1793 இல் கொண்டு வந்தது. கி.பி.1858 வரை இந்நிலை நீடித்தது.

- இந்திய துணைக்கண்டத்தின் மீதான பிரிட்டனின் காலனி ஆதிக்க காலத் தின் தொடக்கமாக இந்நிகழ்வு கருதப்படுகிறது. கிபி.1857 இல் பெரும்பா லான முன்னாள் முகலாய இந்தியாவின் பகுதிகள் பிரிட்டிஷ் கிழக் கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. கி.பி. 1857-1858 இல் நடந்த போருக்கு பகதூர்ஷா ஜாஃபர் பெயரளவுக்கு தலைமை தாங்கினார். ஆனால் போரில் தோல்வியுற்றார். இதன் பிறகு கி.பி.1858 இல் பிரிட்டிஷ் கிழக்கிந் திய நிறுவ னம் கடைசி முகலாயரான அவரை பதவியிறக்கி நாடு கடத்தி யது. இந்திய அரசுச் சட்டம் கி.பி. 1858 இன் படி பிரித்தானிய அரச குடும் பம் கிழக்கிந்திய கம்பெனி கட்டுப்ப டுத்திய இந்தியப் பகுதிகளை தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. இதுவே பிரிட்டிஷ் சாம்ரா ஜியம் என அழைக்கப்பட்டது. கி.பி.1876 இல் பிரிட்டிஷ் அரசி விக் டோரியா இந்தியாவின் பேரரசி என்ற பட்டத்தைப் பெற்றார்.

- மூன்றாம் பானிபட் போர்

- மூன்றாம் பானிபட் போர் 14 ஜனவரி 1761ல் டில்லிக்கு வடக்கே 60மைல் (97கி.மீ) தொலைவில் பானிபட் என்ற இடத்தில் மராட்டிய பேரரசின் வடக்கு படைக்கும், ஆப்கானிஸ்தான் மன்னர் அகமது சா அப்தாலிக்கும் இடையில் நடந்தது. அகமது சா துரா னியை, ரோகில்லாக்கள் மற்றும் அவத் நவாபு சுராஜ்-உத்-தௌலா ஆதரித்தனர்.

- ஆப்கானியர்களுக்கு எதிரான இப்போரில் இராசபுத்திரப் படை களும், சீக்கியப் படைகளும் மராட்டியப் படைகளுக்கு உதவ முன் வரவில்லை. எனவே மராத்தியப் படைகள் தோல்வி கண்டது. ஆப்கானியர்களின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது.
- போரில் ஆப்கானியர்களின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது.
- மராத்தியர்கள் பஞ்சாப், சம்மு காஷ்மீர், தில்லி, தோவாப் எனும் கங்கைச் சமவெளி பகுதிகளை ஆப்கானியர்களுக்கு விட்டுக் கொடுத்தனர்.

- மராத்தியப் பேரரசு சிதைந்து, தனித்தனி நாடுகளாக மாறியது. பஞ்சாபில் சீக்கியப் பேரரசு எழுச்சி பெற வழி வகுத்தது. தென்னிந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி விரிவுபடுத்த இப்போர் காரணமாக அமைந்தது.

Edit with WPS Office

## UNIT- II ஐரோப்பியர்கள் வருகை

இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே பழங்காலம் முதல் வாணி பம் நடைபெற்று வருகிறது. வாணிபம் மேற்கொள்ள வந்த ஐரோப்பியர்கள் பின்பு இந்திய அரசியலிலும் ஈடுபட்டு இந்தியர் களை ஆள ஆரம்பித்தனர். போர்ச்சுகீ சியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கி லேயர்கள்,டேனியர்கள்,பிரெஞ்சுக்காரர்கள் போன்ற ஐரோப்பிய நாட்டி னர் இந்தியாவில் குடியேற்றங்களை ஏற்படுத்தினர். இவர்கள் ஐரோப்பா கண்டதிலிருந்து கடல்வழிப் பயணம் மேற்கொண்டு இந்தியா வந்தவர் களாவர்.

### போர்ச்சுகீசியர்கள்



வாஸ்கோடகாமா

இந்தியாவிற்கு கடல்வழி கண்டுபிடிக்கும் முயற்சியில் முதன்முதலில் ஈடுபட்டவர்கள் போர்ச்சுகீசியர்கள்.போர்ச்சுகீசிய மன்னரான ஹென்றி தனது கப்பல் மாலுமிகளை புதிய கடல்வழி பயணத்தை ஊக்குவித் ததன் காரணமாக **வாஸ் கோடகாமா** என்ற மாலுமி மே-27-1498 -ல் நன்னம்பிக்கை முனையை கடந்து இந்தியாவின் மேற்கு கடற்கரையி லுள்ள கள்ளிகோட்டையை அடைந்தார். அப்போதைய கள்ளிகோட்டை மன்னரான சாமரின் போர்ச்சுகீசியர்கள் வாணிபம் செய்ய அனுமதி அளித்தார். கள்ளிகோட்டை,கண்ணனூர், கொச்சி ஆகிய இடங்க ளில்போர்ச்சுகீசியர்கள் வாணிக நிலையங்களை நிறுவி வணிகம் மேற்கொண்டனர்.

### டச்சுக்காரர்கள்

டச்சுக்காரர்கள் என்பவர்கள் ஹாலந்து நாட்டைச் சார்ந்தவர்கள் ஆவர். இவர்கள் கி.பி.1602-ல் டச்சு கிழக்கிந்திய கம்பெனி உருவாக்கப் பட்டு, இந்தியாவில் மசூலிப் பட்டினம், புலிகாட், சூரத், காரைக்கால், நாகப்பட்டினம், கசிம்பசார் ஆகிய இடங்களில் வணிக மையங்களை நிறுவினர்.ஆங்கிலேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் ஏறத்தாழ எழு பது ஆண்டுகளாக போட்டி நிலவியது.எனவே தங்கள் வாணிக மையங் களை ஆங்கிலேயர்களுக்கு விற்றுவிட்டு இந்தியாவை விட்டு வெளியே றினர்.

### ஆங்கிலேயர்கள்

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் ஆங்கிலேயர்கள்.1609-ல்

Edit with WPS Office

இங்கிலாந் திலிருந்து கேப்டன் **வில்லியம் ஹாகின்ஸ்** ஜகாங்கீரின் அரசவைக்கு வந்தார். போர்ச்சுகீசியர்களின் தூண்டுதலினால் ஆங்கிலே யர்களுக்கு முதலில் அனுமதி தர மறுத்தாலும் கி.பி.1612-ல் ஜகாங்கீ ரிடம் அனுமதி பெற்று ஆங்கிலேயர்கள் கி.பி.1613 -ல் சூரத்தில் வணிக நிலையத்தை நிறுவினர்.இது முதல் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி கி.பி.1858 -வரை இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்தது.

### டேனியர்கள்

டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர்கள் டேனியர்கள் ஆவர்.கி.பி.1620 -ல் தரங் கம்பாடியில் டேனிஷ் வணிக நிலையம் நிறுவப்பட்டது. இந்தி யாவில் அவர்களது வணிக நிலையங்களை விரிவுபடுத்தவில்லை. எனவே கி.பி.1845-ல் தங்களது குடியேற் றங்களை ஆங்கிலேயர்களுக்கு விற்றுவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறினர்.

### பிரெஞ்சுக்காரர்கள்

பிரான்ஸ் மன்னர் பதினான்காம் லூயி மன்னரின் அமைச்சரான கால் பர்ட் என்ப வரால் பிரெஞ்சு கிழக்கிந்திய வணிகக் குழு கி.பி.1664 -ல் அமைக்கப்பட்டது. இவர்கள் கி.பி.1668-ல் சூரத்திலும் கி.பி.1669-ல் மசூ லிப்பட்டினத்திலும் வாணிபத் தளங்களை நிறுவினர்.கி.பி.1673 -ல் பாண் டிச்சேரியில் வணிக நிலையங்களை நிறுவினர். பிரெஞ்சுக்காரர்களுக் கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே போட்டி நிலவியது. இது இந்தியா வில் கர்நாடக போர்களாக மாறின.இறுதியில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினர்.

## கர்நாடக போர்கள்

கர்நாடகப் போர்கள் என்பன 18 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியா வில் நடை பெற்ற மூன்று போர்களாகும். இந்திய ஆட்சியாளர்களின் போர்களில் பிரித் தானிய மற்றும் பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனங் கள் தலையிட்டு மோதிக் கொண்டன. இப்போர்களின் முடிவில் பிரிட் டிஷ் கிழக்கிந்திய நிறுவனம் தென்னிந்தியாவில் பலம் பொருந்திய சக்தியாக உருப்பெற்றது. கர்நாடகம் என்பது தற்கால இந்தியாவின் ஆந் திரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் பகுதிகளைக் குறிக்கின்றது.

### முதலாம் கர்நாடகப் போர்

முதலாம் கர்நாடகப் போர் 1746–1748 காலகட்டத்தில் நடைபெற்றது. ஆற்காடு நவாப், ஐதராபாத் நிசாம் போன்ற இந்திய ஆட்சியாளர்களி டையே ஏற்பட்ட மோதல்களில் பிரித்தானிய மற்றும் பிரெஞ்சு கிழக் கிந்திய நிறுவனங்கள் தலையிட்டு வந்தன. முகலாயப் பேரரசு வலு விழந்த பின்னர் கர்நாடகப் பகுதி டெல்லி ஆட்சியாளர்களின் கட்டுப்பாட் டிலிருந்து விலகி சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கியது. பெயரள வில் ஐதராபாத் நிசாம் இப்பகுதியை ஆண்டு வந்தார். ஆனால் உண்மை யில் நவாப் தோஸ்த் அலியின் கட்டுப்பாட்டில் கர்நாடகப் பகுதிகள் இருந்தன. அவரது மரணத்துக்குப்பின் யார் இப்பகுதியை ஆள்வது என்பது குறித்த பலப்பரீட்சை உருவானது. நிசாமின் மருமகன் சந்தா சாகிபும் ஆற்காடு நவாப் அன்வாருதீன் முகமது

Edit with WPS Office

கானும் கருநாடக நவாப் ஆக முயன்றனர். இருவருக்குமிடையே மூண்ட போரில் சந்தா சாகிப்புக்கு ஆதரவாக பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பனியும், ஆற்காடு நவாப்புக்கு ஆதரவாக பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனியும் களமி றங்கின. 1748 இல் ஐரோப்பாவில் மூண்ட ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் பகுதியாக தென்னிந்தியாவிலும் இரு ஐரோப்பிய நிறுவனங்க ளும் மோதின. ஆளுனர் டூப்ளேயின் பிரெஞ்சுப் படைகள் 1746 இல் சென் னையை பிரித்தானியரிடமிருந்து கைப்பற்றின. அடுத்து நடைபெற்ற அடையார் சண்டையில் ஆற்காடு நவாபின் படைகளைத் தோற்கடித் தன. 1748இல் ஐக்ஸ் லா ஷப்பேல் ஒப்பந்த்தின் மூலம் ஐரோப்பாவில் போர் முடிவுக்கு வந்ததை அடுத்து, தென்னிந்தியாவிலும் அமைதி திரும்பியது.

## இரண்டாம் கர்நாடகப் போர்

இரண்டாம் கர்நாடகப் போர் 1749-54 காலகட்டத்தில் நடைபெற்றது. இரு வாரிசுரிமைச் சச்சரவுகள் இதற்குக் காரணமாக அமைந்தன. 1748 இல் ஐதராபாத் நிசாம் நிசாம்-உல்-முல்க் இறந்தார். அவரது மகன் நசீர் ஜங்கும் பேரன் முசாஃபர் ஜங்கும் அடுத்த நிசாமாகப் போட்டியிட்டனர். அதே வேளை சந்தா சாகிப் ஆற்காடு நவாபாக முயன்றார். முசாஃபர் ஜங்கும் சந்தா சாகிப்பும் பிரெஞ்சு ஆதரவைப் பெற்றிருந்தனர். நசீர் ஜங்கும் ஆற்காடு நவாப் அன்வாருதீனும் பிரித்தானிய ஆதரவைப் பெற்றிருந்தனர். போரின் தொடக்கத்தில் பிரெஞ்சு தரப்புக்குத் தொடர் வெற்றிகள் கிட்டின. அன்வாருதீன் 1749 இல் கொல்லப்பட்டார். சந்தா சாகிபும் முசாஃபர் ஜங்கும் முறையே கர்நாடக நவாபாகவும் ஆற்காடு நவாபாகவும் பதவியேற்றனர். ஆனால் 1751 இல் ராபர்ட் கிளைவ் தலை மையிலான பிரித்தானியப் படைகள் ஆற்காட்டைக் கைப்பற்றின. 1754 இல் கையெழுத்தான பாண்டிச்சேரி ஒப்பந்தத்தின் மூலம் அமைதி திரும்பியது. முகமது அலி கான் வாலாஜா ஆற்காடு நவாபானார். இப்போரின் பலனாக பிரெஞ்சு தரப்பு பலவீனமடைந்து பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்தின் நிலை பலப்பட்டது.

## மூன்றாம் கர்நாடக போர்

1758 இல் மூன்றாவது ஆங்கில மைசூர் போர் மூண்டது. இது ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போரின் ஒரு பகுதியாக இரு தரப்பினராலும் கருதப்பட்டது. தென்னிந்தியாவில் பிரித்தானிய ஆதிக்கத்தை முறியடிக்க பிரெஞ்சுப் பிரபு லால்லி இந்தியாவுக்கு அனுப் பப்பட்டார். புனித டேவிட் கோட்டையை பிரித்தானியரிடமிருந்து கைப் பற்றிய பின்னர் சென்னையை முற்றுகையிட்டார். ஆனால் அதனைக் கைப்பற்றத் தவறிவிட்டார். 1760 இல் பிரித்தானியப் படைகள் வந்தவா சிச் சண்டையில் வெற்றி பெற்றன. காரைக்காலைக் கைப்பற்றின. 1761 இல் பாண்டிச்சேரியும், செஞ்சிக் கோட்டையும் பிரித்தானியரிடம் வீழ்ந் தன. 1763 இல் கையெழுத்தான பாரிசு ஒப்பந்தம், ஏழாண்டுப் போரையும் மூன்றாம் கர்நாடகப் போரையும் முடிவுக்குக் கொண்டு வந்தது. பிரெஞ்சு நிறுவனம் தனது ஆளுகைக் குட்பட்ட பகுதிகளில் பெரும் பாலானவற்றை இழந்தது. இவ்வாறு மூன்று கர்நாடகப் போர்களின் முடிவில் பிரித்தானியக் கிழக்கிந்திய நிறுவனம்

Edit with WPS Office

தென்னிந்தியாவில் பலம் பொருந்திய சக்தியாக உருப்பெற்றது.

**பிளாசி போர் (*Battle of Plassey*)**

கி.பி.1757 இல் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்துக்கும், வங்காளத்தின் நவாப் சிராச் உத் தவ்லாவிற்கும் இடையே நடைபெற்ற ஒரு போர். இதில் கிழக்கிந்திய நிறு வனம் வெற்றி பெற்று வங்காளத்தைக் கைப்பற்றியது. இவ்வெற் றியே இந்தி யாவில் ஆங்கிலேயர் ஆட்சி தோன்றியதன் முதல் படியாகக் கருதப்படுகிறது.

பிளாசி போர் ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போரின் ஒரு பகுதியாகும். ஆற்காடு நவாப் பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆதரவைப் பெற்றிருந்தார். பிரித்தானியக் கோட்டையாக விளங்கிய கல்கத்தாவைத் தாக்கி பல ஆங்கிலேயர் களைக் கொன்றார். இதற்கு பதிலடி கொடுக்கும் வண்ணம் ஆங்கிலேயப் படைகள் வங்காளத்தைத் தாக்கின. பளாஷி (பிளாசி) என்ற இடத்தில் இரு தரப்பின் படை களுக்கும் இடையே இறுதிகட்ட மோதல் ஏற்பட்டது. ராபர்ட் கிளைவ் தலை மையிலான கம்பனி படைகளைக் காட்டிலும் நவாபின் படைகள் பன்மடங்கு எண்ணிக்கை கொண்டிருந்தன. இதனால் கிளைவ் நவாபின் தளபதி மீர் ஜாஃபரு டன் ஒரு சதித்திட்டம் தீட்டினார். இச்சதியின் விளைவாக மீர் ஜாஃபரின் கட்டுப் பாட்டிலிருந்த படைப்பிரிவுகள் போரின் போது கம்பனிப் படைகளைத் தாக்காமல் ஒதுங்கிக் கொண்டன. மீர் ஜாஃபரின் அணிமாற்றத்தால், கிளைவ் எளிதில் வெற்றி பெற்றார்.

## பக்சர் போர்

**பக்சர் சண்டை** அல்லது **பக்சர் போர்** (*Battle of Buxar*) கி.பி.1764 இல் பக்சாரில், (பிகார்) நடைபெற்ற ஒரு சண்டை. இதில் சர் ஹெக்டர் மன்ரோ தலைமையி லான பிரித் தானிய கிழக்கிந்திய நிறுவனத்தின் படைகள் முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலம், அயோத்தி நவாப் , வங்காள நவாப் ஆகியோரின் கூட் டணிப் படைகளை வென்றன. இதன் மூலம் கிழக்கு இந்தியாவில் கிழக்கிந் திய நிறுவனம் பலம் பொருந்திய ஆதிக்க சக்தியாக உருப்பெற்றது.

கி.பி.1757 இல் நடைபெற்ற பிளாசி சண்டையில் வெற்றியடைந்த கிழக்கிந்திய நிறு வனம் வங்காளத்தில் குறிப்பிடத்தக்க சக்தியாக மாறியது. பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடத் தொடங்கியது. குறிப்பாக வங்காளத்தின் நவாப் மீர் காசிமைத் தங்கள் கைப்பாவையாக்க முயன்றனர். ஆனால் மீர் காசிம் அவர்களது கம்பனி அதிகாரிகளின் கட்டளைகளை மீறி சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கி னார். நிருவாகத்தில் சீருதிருத்தங்களை அறிமுகம் செய்தார் தனது படைகளுக்கு ஐரோப்பிய முறைப்படி பயிற்சி அளிக்கத் தொடங்கினார். பிரித்தானியர் விருப் பப்படி இந்திய வர்த்தகர்கள் மீது கூடுதல் வரி விதிக்க மறுத்து விட்டார். இத னால் கி.பி. 1763 கிழக்கிந்திய நிறுவனம் அவரைப் பதவியிலிருந்து விரட்டிய டித் தது. அவுதிற்குத் தப்பியோடிய மீர் காசிம், அவாத் நவாபிடம் தஞ்சம் புகுந்தார். அதே நேரம் வாரிசுரிமைச் சண்டையால் டெல்லியை விட்டு வெளியேறியிருந்த முக லாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலமும் அவுதில் இருந்தார். இவ்விருவரது துணையு டன் அவத் நவாப் சுஜா உத்-தவுலா பிரித்தானியக் கட்டுப்பாட்டில் இருந்த வங்காளத்தின் மீது படையெடுத்தார்.

அக்டோபர் 23, 1764 இருதரப்புப் படைகளும் கங்கையாற்றுக் கரையில் பக் சார் எனுமிடத்தில் சந்தித்தன. இந்திய ஆட்சியாளர்களிடையே ஒற்றுமை யில்லா ததால் அவர்களது படைகள் சரிவர ஒருங்கிணைக் கப்படவில்லை. இதனால் சுமார் 7,000 பேர் அடங்கிய கிழக்கிந்தியக் கம்பனிப்படை சுமார் 40,000 பேர் கொண்ட

Edit with WPS Office

இந்தியப் படையை எளிதில் தோற்கடித்தது. போர்க் களத்தை விட்டு தனது கருவூலத்துடன் தப்பியோடிய மீர் காசிம் பின்பு தற்கொலை செய்து கொண்டார். ஷா ஆலம் வாரணாசியில் கம்பனிப் படை களிடம் சரண் அடைந்தார். வங்காளம், ஒரிசா, பீகார் பகுதிகளில் பிரித்தானிய ஆட்சியை அங்கீகரித்தார். இவ்வாறு பாக்சார் சண்டையின் முடிவில் கிழக் கிந்திய நிறுவனத்தை எதிர்த்த இந்திய ஆட்சி யாளர்கள் வலுவிழந்து போயி னர்.

## மேஜர் ஜெனரல் ராபர்ட் கிளைவ்

மேஜர் ஜெனரல் **ராபர்ட் கிளைவ்**, 1வது பெரன் கிளைவ், (*Robert Clive, 1st Baron Clive*, செப்டம்பர் 29, 1725 - நவம்பர் 22, 1774) , வங்காளத்தில் பிரிட்டிஷ் கிழக் கிந்திய கம்பெனியின் இராணுவ மற்றும் அரசியல் மேலாதிக்கத்தை நிலை நாட்டிய ஒரு பிரிட்டிஷ் அதிகாரி ஆவர். இந்தியத் தலைமை ஆளுநர் வாரன் ஹேஸ்டிங் சும் படைத்தலைவர் இராபர்ட் கிளை வும் பிரித் தானிய இந்தி யாவை உருவாக்கிய முக்கிய நபர்களாகக் கருதப்படுகின்றனர். ராபர்ட்கிளைவ் இங்கிலாந்தில் நடுத்தர குடும்பத்தில் பிறந்தவர். அத்தை வீட்டில் பால பரு வத்தை கழித்த கிளைவ் இளைஞனானதும் வீட்டுக்கு அடங்காமல் திரிந்தார். குறிப்பாக பொறுக்கியாக திரிந்தவர் தன் நண்பகர்ளை சேர்த்து கொண்டு, டிரைட்டன் சந்தையில் உள்ள கடைகளில் மிரட்டி மாமுல் வசூலித்தார் என் கின்றன வரலாற்று குறிப்புகள். இரண்டு முறை ஜெயிலுக்கு சென்று வந்த கிளைவை அவர் தந்தை ரிச்சர்ட் கிளைவ் கிழக்கிந்திய கம்பெனிக்கு எழுத்தர் வேலைக்கு அனுப்பினார்.

இராபர்ட் கிளைவ் கி.பி. 1725-ம் வருடம் செப்டம்பர் 29-ம் நாள் இங்கிலாந் தில் உள்ள டிரேட்டன் சந்தை அருகில் பிறந்தார். தனது இள வயதில் டிரேட் டன் சந்தையில் மாமூல் கேட்டு மிரட்டுவது, தனது வயதுள்ள இளைஞர்க ளை உடன் வைத்துக்கொண்டு பெரும் ரகளையில் ஈடுபடுவது என தந்தை ரிச்சர்ட் கிளை விற்கு பெரும் தலையாகவலியாக இருந்தார் கிளைவ். இத னால் தனது தங்கை வீட்டில் ராபர்ட் கிளைவை இடம் மாற்றி னார் தந்தை ரிச்சர்ட் கிளைவ். லண்டன் நகர வீதிகளிலும் அதே ரகளையில் ஈடுப்படுவதை வழக்கமாக கொண்டிருந்த கிளைவ் தனது அத்தைக்கும் பெரும் தலைவலி யாகி பொறுக்கியாக திரிந்துள்ளார். தினம் ஒரு சண்டையின் காரணமாக பலபேர் கிளைவின் அத்தையை திட்டுவது வழக் கமான நிகழ்வாகியுள்ளது. கி.பி.1743-ம் ஆண்டு மார்ச் 10-ம் தேதி மெட்வே என்ற இடத்தில் இருந்து தந்தை ரிச்சர்ட் கிளைவால் இந்தியாவில் உள்ள கிழக் கிந்திய கம்பெனிக்கு கணக்கெழுதும் கிளார்க் வேலைக்கு அனுப்பி வைக்கப் பட்டு உள்ளார், அப் போது கிளைவுக்கு 18 வயது. 18 மாதப் பயணத்துக்குப் பிறகு, சென்னை வந்து சேர்ந்தார் கிளைவ். கிழக்கிந்தியக் கம்பெனியில் அவருக் குத் தரப்பட்ட சம்ப ளம் ஆண்டுக்கு 5 பவுண்ட். அதா வது, இந்தியப் மதிப்பில் 50 ரூபாய். கிளார்க் வேலையில் நாட்டமில் லாமல், இருமுறை துப்பாக்கியால் சுட முயற் சித்து தற்கொலைக்கு முயன் றுள்ளார். தற்கொலைக்கு கிளைவ் முயன்ற தற்கு காரணம் நம் தேசத்தின் வெப்ப மயமான சூழல்தான். நம் தேச வெயில் அவரை நிம்மதியாக உறங்கவிடவில்லை.நிம்மதியான தூக்கமில்லாமல் வெப்பத்தின் தாக்கத்தால் தவித்துள்ளார் கிளைவ். கி.பி.1746ம் வருடம் பிரஞ்சு தளபதி லெபூர்தனே சென்னை ஜார்ஜ் கோட்டையை பிடித்தார். அப்போது ராபர்ட் கிளைவையும் கைது செய்தார். ஆனால் கிளைவ், தமிழர்களை போன்று உடை அணிந்து ஜார்ஜ் கோட்டையில் இருந்து தப்பி கடலூர் தேவனாம்பட்டினத்தில் உள்ள புனித டேவிட் கோட்டைக்கு சென்றார். அப்போது புதுச்சேரியில் இருந்த பிரெஞ்சு கவர்னர் டூப்லெக்ஸ் பிரிட்டிஷ்காரர்கள் மீது போர் தொடுத்தார். இரவு கடலூர் தேவனாம்பட்டினம் அருகே போர் ஆரம்பமானது பிரெஞ்சு படையை எதிர்க்க தயார் நிலையில் பிரிட்டிஷார் இருந்தாலும் பிரெஞ்சு படையின் எண்ணிக்கையை ஒற்றர் மூலம் தெரிந்துகொண்ட பிரிட்டிஷார் கொஞ்சம் கலக்கமாகத்தான் இருந்தார்கள். எந்த

Edit with WPS Office

போர் பயிற் சியும் இல்லாத ராபர்ட் கிளைவ் இருளான சூழலைப் பயன்படுத்தி சாதுரி யமாக செயல்பட்டு பிரெஞ்சுகாரர்களின் பின்புறம் தைரியமாக வந்து, சில வெடிகுண்டுகளை திடீரென வெடிக்க செய்த தில் பிரெஞ்சு வீரர்கள் குழப் பத்தில் சிதறுண்டு ஓடினார்கள். அந்த சமயத்தை பயன்படுத்திக்கொண்ட பிரிட்டிஷ் படை வீரர்கள். பிரெஞ்சு சிப்பாய் களை வேட்டையாட ஆரம்பித் தனர். பிரெஞ்சுகாரர்கள் பின்வாங்கி உயிர் பிழைத்து ஓடியதே பெரிய காரியமானது. இந்த வெற்றி பற்றிய செய்தி இங்கிலாந்து அரசர்வரை தெரி விக்கப்பட்டது. இருந்தாலும் கிளைவிற்கு பெரிதான பதவியை கிழக்கிந்திய நிறுவனம் தந்துவிடவில்லை. டூப்லெக்ஸ் "யார் இந்த ராபர்ட் கிளைவ்? நம்மை மண்ணை கவ்வ வைத்துவிட்டானே" என்று விசாரணை செய் யும் அளவிற்கு கிழக்கிந்திய படையில் பிரபலமானார் கிளைவ். கி.பி. 1757-ம் ஆண்டில் கல்கத்தா அருகில் உள்ள பிளாசி என்னும் ஊரில் சிராஜ்-உத் -தௌ லாவை தோற்கடிக்க கிளைவை அனுப்பி வைத்தது கிழக்கிந்திய நிறுவனம். சிராஜ்-உத்-தௌலாவின் முக்கிய அதிகாரிகளையும் வீரர்களை யும் லஞ்சம் கொடுத்து வளைத்தார் கிளைவ். லஞ்சம் வாங்கிக் கொண்டு அதிகாரிகள், சிப்பாய் கள் ஒதுங்கிய பின்பு சிராஜ்-உத்-தௌலாவை தோற்கடித் தார் கிளைவ். இதனால் கிழக்கிந்திய நிறுவனத்தை இந்தியாவில் நிலைபெற செய்த நாயகன் என்னும் பெயரை பெற்றார் கிளைவ். இன்றும் அவருக்கு அந்த பெயரே நிலைத்து நிற் கிறது. பிற்பாடு சென்னையின் மேஜர் ஜெனரல் பதவியை கிழக்கிந்திய நிறுவனம் கிளை விற்கு கொடுத்து கௌரவித்தது. கிளார்க் வேளையில் இருந்தபோதே சரக்குகளை ஏற்றும்போதும் இறக்கும் போதும் கணக்குகளில் பல தில்லு முல்லு வேலைகளை செய்து பெரும் பணத்தை சம்பாதித்தார். ஊழல் செய்து சம்பாதித்த பணத்தை வைத்தே சென்னையின் மேஜராகும் அளவிற்கு உயர்ந்துள்ளார் கிளைவ். மேஜர் ஜெனரல் ஆனதும் வேறுவழியில் பெருமளவில் லஞ்சம் பெற் றும், ஆற்காடு நவாப்புகளுக்கு அடியாட்களாக ஆங்கிலேய சிப்பாய்களை அனுப்பி வைத்தும் பெருமளவில் சொத்து சேர்த்தார் கிளைவ். பணி முடிந்து இங்கிலாந்து திரும்பிய போது அவரிடம் இருந்த பணம் சுமார் ஒன்றே முக்கால் லட்சம் பவுண்ட் அதாவது இருபது லட்சம் ரூபாய். அன்றைய இங்கிலாந்தின் ஒரு பவுண்ட்டின் இந்திய மதிப்பு வெறும் பத்து ரூபாய்தான். ஆகவே அவர் எடுத்து சென்ற பணம் இருபது லட்சம் ரூபாய் மட்டுமே. 240 ஆண்டுகளுக்கு முன்பு இருபது லட்சம் ரூபாயை கையாள்வதும், செலவு செய்வதும், பாதுகாப்பதும் என்பது மிகப்பெ ரும் சவாலான விஷயமாகும். தனது சேமிப்பை இந்தியாவில் இருந்து எளிதாக எடுத்துச் செல்ல வைரமாக மாற்றிக் கொண்டார் என்றொரு குறிப்பும் வரலாற்றில் காணப்படுகிறது. அவர் 1400 தங்கப் பாளங்களைக் கொண்டு சென்ற "டோனிங்டன்" என்ற கப்பல், புயலில் சிக்கி மூழ்கியது. ராபர்ட் கிளைவ் மீது பெரும் ஊழல் குற்றசாட்டை கூறி இங்கிலாந்து நாடாளு மன் றத்தில் விவாதம் நடந்தது. விசாரணையில் தான் பெரும் நல்லவன் என பெரும் கூப்பாடு போட்டார் கிளைவ். ஆனாலும் ராஜ துரோக குற்றம் செய் தார் என பல உறுப்பி னர்களால் திட்டி தீர்க்கப்பட்டார் கிளைவ். இங்கி லாந்து அரசும் கிளைவை ஒதுக்கி தள்ளியே வைத்திருந்தது. பின்பு லண்டன் நகரின் குறிப்பிட்ட செல்வந்தர்களில் ஒருவராக சுகபோக வாழ்க்கையை வாழ்ந்தார் கிளைவ். தனது 49-வது வயதில் தன் கழுத்தை தானே அறுத்துகொண்டு தற் கொலை செய்துகொண்டார்.

## **வாரன் ஹேஸ்டிங்ஸ்** (Warren Hastings)

**வாரன் ஹேஸ்டிங்ஸ்** (Warren Hastings) (6 டிசம்பர் 1732 – 22 ஆகஸ்டு 1818), சிறந்த ஆங்கிலேயே அரசியல் அறிஞர். பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனி யின், வங்காளத்தின் முதல் தலைமை ஆளுனராக 1773 முதல் 1785 முடிய பணியாற்றியவர். இவர் காலத்தில்தான் இந்தியாவில் கம்பெனி ஆட்சி காலூ ன்றியது. பின்னர் இவர் மீது 1787ஆம் ஆண்டில் ஊழல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு, இங்கிலாந்து உயர் நீதிமன்றத்தால் விசாரணை நடத்தப் பட்டு,

Edit with WPS Office

1814ஆம் ஆண்டில் குற்ற வழக்கிலிருந்து விடு விக்கப்பட்டார். இங்கி லாந்தில் , இராபர்ட் கிளைவுக்கு அடுத்தபடியாக அதிகம் பேசப்பட்டவர். கிழக் கிந்திய கம்பெனியில் ஆகஸ்டு 1750ஆம் ஆண்டில், கொல் கத்தாவில் எழுத்த ராக பணியேற்றார். கடுமையாக உழைத்து , உருது , பாரசீகம் போன்ற மொழி களை கற்றவர். 1752இல் பதவி உயர்வு பெற்று, ஆங்கிலே யேர்களின் முக்கிய வணிகத் தலமான *காசிம் பஜார்* பகுதியில் பணியில் இருக்கையில் கிழக்கிந் திய அரசியலை நன்கு அறிந்தார். 3 சூன் 1756இல் வங்காள நவாப் *சிராஜ் உத் தௌலா*வின் படையால், கிழக்கிந்திய கம்பெனி படைகள் சிறை பிடிக்கப் பட்டு முர்சிதாபாத்தில் அடைக்கப்பட்டனர். 1757ஆம் ஆண்டில் இராபர்ட் கிளைவ், சென்னையிலிருந்து புறப்பட்டு, வங்காள நவாப் சிராஜ் உத் தௌ லாவை பிளாசிப் போரில் வென்று, மீர் ஜாபரை அரியனையில் ஏற்றி, வாரங்ஹேஸ்டிங்ஸை மீட்டார். முதல் ஆங்கிலேயே மைசூரின் முடிவின் போது, சென்னையை கைப்பற்ற வந்த ஐதர் அலியை எதிர் கொள்ள, வாரன் ஹேஸ்டிங்ஸ் சென்னை வந்தடைந்தார். சென்னை, கொல்கத்தா, பம்பாய் போன்றா முதன்மை மாகாணங்களை தனித்தனி தலைமை ஆளுனர்களால் ஆளப்படும் முறையை நீக்கி, அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும், கிழக்கிந்திய கம்பெனியின் ஒரே தலைமை ஆளுனர் ஆட்சிக்கு வித்திட்டார். மேலும் வாரன் ஹேஸ்டிங்ஸ், கிழக்கிந்திய கம்பெனியின், இந்தியாவின் தலைமை ஆளுனராக, 1773ஆம் ஆண்டில் கல்கத்தாவில் பதவி ஏற்றுக் கொண்டார். கொள்ளை கூட்டத்தவர்களை கட்டுப்படுத்தினார். வாரன் ஹேஸ்டிங்ஸ், வங்காளத்தின் ஆளுனராக இருந்த காலத்தில் 1770ஆம் ஆண்டு வங்காளப் பஞ்சத்தை எதிர் கொண்டார். பஞ்சத்தில் பத்து மில்லியன் மக்கள் பசிக் கொடுமையாலும், நோயாலும் கொல்லப்பட்டனர். பிட்டின் இந்தியா சட்டப் படி மும்பை மற்றும் சென்னை மாகாணங்களின் ஆளுனர்கள் தன்னிச்சை யாகச் செயல்படும் உரிமையை இழந்தனர். வங்காள மாகாண ஆளுனராக வாரன்ஹேஸ்டிங்ஸ் 1774ஆம் ஆண்டு முதல் தலைமை ஆளுனராக பதவி உயர்த்தப்பட்டார். மற்ற மாகாண ஆளுனர்கள், வங்காள மாகாண ஆளுனரின் மேற்பார்வையில் செயல்படத் தொடங்கினர். கல்கத்தா, கம்பெனி அட்சி யின் தலைநகராக மாறியது. பத்தாண்டு பணி நிறைவு செய்த வாரன்ஹே ஸ்டிங்ஸ், ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக, பிரித்தானிய இந்தியா வின் தலைமை ஆளுனர் பணியை துறந்தார்.

காரன்வாலிஸ் முன்னோர்கள் முதலாம்சார்லசுக்கு சேவை
செய்தவர்கள் . இரண்டாம்சார்லசு காலத்திலும் அவருக்கு துணையாய் நின்றவர்கள் . எனவே வெளிநாடு சென்று கல்வி கற்பதிலும் ,அரசியல் செல்வாக்கு அடைவதிலும் அதிக சிரமம் ஏற்படவில்லை .அமெரிக்காவுடன் மோதல் போக்கை தவிர்க்க முயன்றாலும் , அமெரிக்க போரில் இவர் ஈடுபடும் கட்டாயம் ஏற்பட்டது .ஆரம்பத்தில் இவருக்கு வெற்றி கிட்டினாலும் இறுதியில் யார்க் டவுன் போரில் தோல்வியுற்று கைது ஆனார் .பின் பரோலில் விடுதலை செய்யப்பட்டு இங்கிலாந்து வந்தடைந்தார் .பின்னர் இந்திய கவர்னர் ஜெனரல் மற்றும் ராணுவ கமாண்டர் ஆக பொறுப்பேற்று திப்புவை மூன்றாம் மைசூர் போரில் சரணடைய செய்தார் .அயர்லாந்தில் கலகம் ஏற்படவே அங்கு சென்றார் .நெப்போலியனுடன் சமரசம் கண்டார் .பின்னர் மறுபடியும் இந்தியாவிற்கு வந்து ,சில நாளில் நோய் வாய்ப்பட்டு மரணம் அடைந்தார்

1786 ஆம் ஆண்டு கவர்னர் ஜெனரல் மற்றும் ராணுவ கமாண்டர் ஆக இந்தியாவில் பதவி ஏற்றார் .முன்னதாக 1782 ஆம் ஆண்டிலேயே இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக பரிந்துரைக்க ப்பட்டாலும் , ராணுவ பதவி தராததால் வேலையில் சேர மறுத்து விட்டார் .

காரன்வாலிஸ் மேற்கொண்ட உள்நாட்டு சீர்திருத்தங்களை மூன்று பிரிவுகளாக

Edit with WPS Office

அறிந்து கொள்ளலாம்.

1 . ஆட்சித்துறை சீர்திருத்தங்கள்

2 வருவாய் சீர்திருத்தங்கள் அல்லது நிலையான நிலவரித்திட்டம்

3. நீதித் துறை மற்றும் பிற சீர்திருத்தங்கள்.

திறமையான மற்றும் நேர்மையான பணியாளர்களை நியமித்து ஆட்சிப் பணித்துறையை செம்மைப்படுத்தியதே காரன்வாலிஸ் மேற்கொண்ட சீர்திருத்தங்களில் முதன்மையானதாகும். சிக்கனம், எளிமை, தூய்மை ஆகியவற்றை அவர் தனது நோக்கங்களாகக் கொண்டிருந்தார். வணிகக்குழுவில் பணியாற்றிய ஊழியர்களுக்கு சொற்ப ஊதியமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால், அவர்கள் வருவாய்க்குமேல் பெருமளவு தரகுப் பணத்தைப் பெற்று வந்தனர். மேலும் தடை செய்யப்பட்டிருந்த அதிக வருமானமுள்ள தனிப்பட்ட வாணிகத்திலும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பெயரில் ஈடுபட்டு வந்தனர். ஆட்சித் துறையை தூய்மைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட காரன்வாலிஸ், குறைந்த ஊதியம் மற்றும் அதிக ஈட்டுப்படிகள் என்ற வழக்கத்தை ஒழித்தார். வணிகக்குழு ஊழியர்களுக்கு நிறைவான ஊதியம் வழங்கும்படி இயக்குநர் குழுவிடம் கேட்டுக் கொண்டார். இதன்மூலம் ஊழல் மிகுந்த வணிக முறைகளைக் களையமுடியும் என்று எடுத்துரைத்தார்.

மேலும் தகுதியின் அடிப்படையிலேயே நியமனங்கள் செய்யப்படவேண்டும் என்ற கொள்கையையும் காரன் வாலிஸ் தொடங்கி வைத்தார். இவ்வாறு இந் திய ஆட்சிப் பணித்துறைக்கு அவர் அடித்தளம் அமைத்தார். செலவினங்க ளைக் குறைப்பதற்காக பல்வேறு அதிகப்படியான பணியிடங்களை ரத்து செய் தார். வணிகம் , நீதி , வருவாய் ஆகிய மூன்று துறைகளின் செயல்பாடுகளை தனித்தனியே பிரித்து ஒரு புதிய வகை ஆட்சியமைப்பை அறிமுகப்படுத்தி னார். ஆட்சியமைப்பின் அச்சாணிகளாக இருந்த மாவட்ட கலெக்டர்களிடமி ருந்து நீதித்துறை அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. அவர்கள் வருவாய்த்துறை யில், வரிவசூலிக்கும் பணியை மட்டும் கவனித்து வந்தனர்.

06-.12-.1782 இல் மன்னர் ஹைதர் அலியின் மர¬ணத்தை தொடர்ந்து 26.-12-.1782 இல் தனது 32 ஆவது வயதில் திப்பு சுல்தான் மைசூர் மன்¬ன¬ரானார். மன்னர் திப்பு சுல்தான் “புலி சின்னம்” பொறிக்¬கப்¬பட்ட கொடியை தனது சின்¬ன¬மாக பயன்¬ப¬டுத்¬தினார். இதனால் திப்புசுல்தான் “மைசூரின் புலி” என அழைக்¬கப்¬பட்டார். இரண்டாம் மைசூர் போர் அதா¬வது மேற்கு கடற்¬க¬ரை¬யி¬லி¬ருந்து ஆங்¬கி¬லே¬யர்¬களை துரத்த வேண்டும் என்ற எண்¬ணத்தில்திப்பு சுல்தான் பிரான்ஸ் படை¬யி¬ன¬ரையும் சேர்த்துக் கொண்டு 1780 ஆம் ஆண்டில் போர் தொடுத்தார். யுத்தம் நடை¬பெற்று நான்கு வருட முடிவில் 1784 ஆம் ஆண்டில் பிரான்ஸ் மன்னன் 16 ஆம் லூயி பிரிட்¬ட¬னுடன் சம¬ரசம் செய்து கொண்¬டதால் திப்பு சுல்தான் வேறு வழி¬யில்¬லாமல் போரை நிறுத்த வேண்¬டிய நிலை ஏற்¬பட்¬டது. 1784 ஆம் ஆண்டு முடி¬வுற்ற இப்¬போரில் ஆங்¬கி¬லேய தள¬பதி உள்¬ளிட்ட 4,000 இரா¬ணுவ வீரர்கள் திப்பு சுல்¬தானால் போர்க் கைதி¬க¬ளாக பிடிக்¬கப்¬பட்டு பின் னர் விடு¬விக்¬கப்¬பட்¬டனர். இந்த அவ¬மானம் ஆங்¬கி¬லே¬யர்¬க¬ளுக்கு திப்பு சுல்¬தானை நினைத்¬தாலே குலை நடுங்க செய்¬தது. 1789 ஆம் ஆண்டு திப்பு சுல் தான் தலை¬மையில் ஆங்¬கி¬லே¬ய¬ருக்கு எதி¬ராக நடை¬பெற்ற மூன்றாம் மைசூர் போரில் மராட்¬டிய பேர¬ரசும்,ஹைத¬ரபாத் நிஜாமும், பிரிட்டிஷ் படைத் தள¬பதி கார்ன் வாலி¬ஸுடன் இணைந்து திப்பு சுல்¬தா¬னுக்கு எதி¬ராக போர் தொடுத்¬தனர். திப்பு சுல்தான் எதி¬ரி¬களை துணிச்¬ச¬லுடன் எதிர்¬கொண்ட போதிலும் 1792 ஆம் ஆண்டு வரை நடை¬பெற்ற இந்தப் போரில் திப்பு சுல்தான் தோல்வி அடைந் தார். இறு¬தியில் ஸ்ரீரங்¬கப்¬பட்¬டிணம் அமைதி ஒப்¬பந்¬தத்¬தின்¬படி பல பகு¬திகள்

Edit with WPS Office

பிரிட்டிஷ், ஹைத¬ரா¬பாத்¬நிஜாம் மற்றும் மராட்¬டி¬யர்¬க¬ளிடம் ஒப்¬ப¬டைக்¬கப்¬பட்¬டன. மூன்றாம் மைசூர் போரின் ஆரம்¬பத்தில் வெற்றி பெற்ற திப்பு சுல் தான் போரின் இறுதிக் கட்¬டத்தில் மராட்¬டி¬யர்கள் நய¬வஞ்¬ச¬கத்¬த¬ன¬மாக ஆங்¬கி¬லே¬யர்¬க¬ளுடன் இணைந்து கொண்¬டதால் ஒப்¬பந்தம் செய்¬து¬கொள்ளும் நிலைக் குத் தள்¬ளப்¬பட்டார். மைசூரின் பாதி நிலப்¬ப¬ரப்பும் எதி¬ரிகள் வசம் சென்¬றது. இழப்¬பீட்டுத் தொகை¬யாக 3.3 கோடி நிர்¬ண¬யிக்¬கப்¬பட்¬டது. இழப்¬பீட்டுத் தொகை யை செலுத்தும் வரை திப்பு சுல்¬தானின் இரு மகன்கள் பிணைக் கைதி¬க¬ளாகப் பிடித்து வைக்¬கப்¬பட்¬டனர். திப்பு சுல்தான் இழப்¬பீட்டுத் தொகையை செலுத்தி தனது இரு மகன்¬களை மீட்டார். ஆங்¬கி¬லே¬யர்¬களால் ஸ்ரீரங்கப் பட்¬டிணம் முற்¬றுகை இடப்¬பட்ட போதிலும் திப்பு சுல்¬தானின் கோட்¬டைக்குள் நுழைய இய¬ல¬வில்லை.

செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த காரன்வாலிஸ் நாட்டுப்பற்று மிக்கவராகத் திகழ்ந்தார். தனது கடமைகளை அச்சமின்றி நிறைவேற்றினார். கடமையும் தியாகமும் அவரது மூச்சாக விளங்கியது. திப்புவின் வளர்ச்சி அஞ்சும் நிலை க்கு சென்றபோது, தலையிடாக் கொள்கையை கைவிட்டு துணிச்சலுடன் அதனை எதிர்கொண்டார். ஒரு ஆட்சியாளராக வணிகக்குழுவின் ஆட்சியை இந்தியாவில் நிலைப்படுத்தினார்.

தூய்மையான திறமையான நிர்வாகத்திற்கு அடித்தளம் வகுத்தார். அவர் கொண்டுவந்த நிலையான நிலவரித் திட்டத்தில் குறைகள் இருந்தபோதி லும், ஆட்சித் துறை, நீதித்துறை சீர்திருத்தங்களில் தமது முத்திரையை காரன் வாலிஸ் பதித்துவிட்டுச் சென்றார். தற்கால இந்திய ஆட்சிப் பணியின் தந்தை என்று அவரைக் கருதலாம். காரன்வாலிசை தொடர்ந்து சர் ஜான் ஷோர் (1793 - 98) தலைமை ஆளுநராக பதவி வகித்தார். இவரது ஆட்சிக்காலத்தில் குறிப் பிடத்தக்க நிகழ்வுகள் ஏதும் இல்லை எனலாம்.

## வெலஸ்லி பிரபு

**துணைப்படைத் திட்டம்** (*Subsidiary alliance*) என்பது **பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனம்**, இந்திய அரசர்களின் ஆட்சி அதிகாரத்தை குறைக்கவும் மற்றும் எளி தில் அவர்களது இராச்சியங்களைக் கைப்பற்றக்கூடிய அளவிற்கு அமைத்த ஒரு திட்டமாகும். இத்திட்டத்தை பிரித்தானிய ஆளுநராக 1798 முதல் 1805 வரை பதவி யில் இருந்த வெலஸ்லி பிரபு கொண்டு வந்தார். இத்திட்டத்தின்படி அரசர்கள் அனைவரும் கிழக்கிந்தியக் கம்பனியின் இராணுவப் படையை தனது நாட்டின் பாதுகாப்பிற்கான படையாக வைத்துக்கொள்ள வேண்டும் மற்றும் அவர்கள் தங் களுக்கென்று படைகள் ஏதும் வைத்துக்கொள்ளக் கூடாது மற்றுமிவர்கள் இப் படைக்காக வரி மற்றும் பணத்தைக் கெம்பனியினரிடம் செலுத்த வேண்டும் இல்லையேல் அவர்கள் தங்களது ஆட்சிப்பகுதியில் குறிப்பிட்ட இடத்தை அவர் களிடம் அபராதமாக ஒப்படைக்க வேண்டும். இத்திட்டத்தின் மூலம் பிரித்தானி யர்கள் பாரதத்தின் பல இடங்களை எளிதில் கைப்பற்றினர்.

Edit with WPS Office